# 9 எழுத்துருவின் கட்டமைப்பைத் திட்டமிடுதல்

(#16, எழுத்துருக் கட்டமைப்புக்கான மதியுரைகளையும் பார்க்க)

**இலக்கு**

மாணவர்கள் எழுத்துருவை மேலும் சிறப்பாகக் கட்டமைக்க (முன்னுரை/உடல்/முடிவு என காலவரிசைப்படி சரியான ஒழுங்கில் பிரிக்கப்பட்டவை) உதவும் இரண்டு உத்திகளைக் கற்கின்றனர். இவை பகுதி #8 இல் குறிப்பிடப்பட்ட உத்திகளை (கொத்துகள், மனவரைபடங்கள், இடுநிலைப்பாய்கள்) குறைநிரப்புகின்றன.

## 1. கால வரிசைப்படி செயற்படல்

2 - 7 ஆந் தரம் | 20 மணித்துளிகள்




அ) ஆசிரியர் ஒரு கால வரையறையை (ஒரு நீண்ட அம்பு, மேலே பார்க்கவும்) பலகையில் தீட்டுகிறார் (அல்லது திட்டமிடுகிறார்), ஒரு எழுத்துருவை எப்படித் தெளிவாகக் கட்டமைக்க முடியும் என்பதை விளங்கிக்கொள்ள அது துணைசெய்யும் என்பதை வகுப்புக்கு விளக்குகிறார்.

ஆ) காட்சிப்படுத்தல் தேவைகளுக்கும் தெளிவுக்கும், வகுப்பு ஒரு விரிவான எடுத்துக்காட்டை நோக்கும். தெளிவான நிகழ்வுகளைக் கொண்ட ஒரு கருப்பொருள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, "என் கோடை விடுமுறை", "சென்ற கிழமை முடிவு", "அன்னை திரேசாவின் வாழ்வு". விவரண அல்லது பிரதிபலிக்கும் தலைப்புகளான "அமைதி பற்றிய என் எண்ணங்கள்" முதலாயின இந்நெறிமுறைக்கு ஏற்றனவல்ல. (பின்வரும் மூன்றுபகுதி திட்டத்தினைப் பார்க்கவும்).

இ) ஆசிரியர் ஓர் எழுத்துருவின் வேறுபட்ட தொடர் படிகளைக் கட்டமைக்கவும் அடையாளப்படுத்தவும் மிகவும் பொருத்தமான சொற்களையும் தொடர்களையும் முடிவு செய்வதற்குப் வகுப்புடன் செயற்படுவர். "தொடக்கத்தில், பின்னர், அதன் பின்னர், பிறகு, அடுத்தநாள், நிறைவாக, முடிவில் முதலாயவை" இப்பயிற்சியும் பாரம்பரியமொழியின் பொருத்தமான சொற்களஞ்சியத்தைக் கட்டியமைக்க மாணவர்களுக்குத் துணைசெய்யப் பணியாற்றுகிறது.

ஈ) மாணவர்கள் எளிமையான செயல் சார்ந்த ஒரு தலைப்பையும் ("ஒவ்வொரு நாளைய என் நடைமுறை ஒழுங்கு") A3 தாளையும் பெறுவர். அதில் அவர்கள் ஒரு கால வரிசையை வரைந்து செயற்பாட்டின் பல்வகைப் பகுதிகளை எழுதுவர். பின்னர் முழு வகுப்பினாலும் பக்கங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டு கலந்துரையாடப்படும்.

உ) நிறைவாக, மாணவர்கள் தம் எழுத்துருவை உரைநடையில் எழுதுவர், அதன் மூலம் காலவரிசை நிலைகளில் தம்மைச் சார்த்திக்கொள்கின்றனர்.